முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த அந்த இரண்டு பகுதிகளிலும் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை. அந்த நிலம் மின்சார வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தால், பணியைத் தொடங்குவதற்குண்டான நடவடிக்கையை மேற்கொள்கின்றோம். அந்த இடம் ஒப்படைக்கப்படவில்லை, வேறு துறையில் இருக்கிறது என்று சொன்னால், அதை அரசின் மூலமாக மின்சார வாரியத்திற்கு மாற்றி, அந்தப் பணிகளை ஆரம்பித்து, விரைந்து முடிப்பதற்குண்டான நடவடிக்கையை மேற்கொள்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

64—

பொறியியல் கல்லூரி

***13157—திரு. பா. நீதிபதி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதியில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் பொறியியல் கல்லூரி துவக்குவது குறித்த கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 ஜூன் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.*

திரு. பா. நீதிபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்காகவும், தமிழ்நாட்டினுடைய வளர்ச்சிக்காகவும் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து, வாழும் காலங்களிலே வாழும் வரலாறாக வாழ்ந்து, வாழ்ந்த காலங்களிலே மனித தெய்வங்களாக வாழ்ந்து, இன்றைக்கும் அனைத்து தமிழக மக்களுடைய இதயங்களிலும் மனித தெய்வங்களாக வாழ்ந்துகொண்டிருக்கும் தலைவரான, ஏழை மக்களுக்குக் கொடுத்துக் கொடுத்து சிவந்த கரத்துக்குச் சொந்தக்கார தலைவர்களான டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடி கே. பழனிசாமி அவர்களையும் வணங்குகிறேன்.*

எங்களுடைய உசிலம்பட்டி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. இங்கே அரசு பொறியியல் கல்லூரியும் கிடையாது, அரசு கலைக் கல்லூரியும் கிடையாது. எங்களுடைய உசிலம்பட்டி தொகுதி மக்கள் கல்லூரிகளுக்கு செல்வதாக இருந்தால், ஒன்று மதுரை மாநகருக்குச் செல்லவேண்டும். பேருந்திலே போக வர 60, 60 கிலோ மீட்டர் என 120 கிலோ மீட்டர் தினமும் சென்று வரவேண்டும். தனியார் பொறியியல் கல்லூரியாக இருந்தால், திண்டுக்கல் மாவட்டத்திற்குச் செல்ல வேண்டும். அரசு பொறியியல் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமானால் தேனி மாவட்டத்திலே உள்ள போடிக்குச் செல்ல வேண்டும். தனியார் பொறியியல் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமானால், விருதுநகர் மாவட்டத்திற்குச் செல்ல வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே எங்களுடைய பகுதி மாணவ மாணவிகள் தவித்துக்கொண்டிருக்கின்றார்கள். உசிலம்பட்டியிலிருந்து பொறியியல் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமானால், தினமும் பேருந்திலே 120 கிலோ மீட்டரிலிருந்து 140 கிலோ மீட்டர் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்வது, தயவுசெய்து மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கனிவான பார்வைக்குக்

கொண்டு சென்று, ஒரு பொறியியல் கல்லூரியோ அல்லது அரசு கலைக் கல்லூரியோ எங்களுடைய உசிலம்பட்டி தொகுதிக்கு அமைத்துத் தர வேண்டுமென்று எங்களுடைய தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய பகுதியிலிருந்து பொறியியல் கல்லூரிக்கு தொலைதூரம் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்று சுட்டிக்காட்டினார்கள். மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரை ஓர் அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரியும், 11 சுய நிதிக் கல்லூரிகளும், ஆக மொத்தம் 12 கல்லூரிகள் இருக்கின்றன. அந்த 12 கல்லூரிகளில் கடந்த 2015–2016, 2016–2017 ஆகிய இரண்டு கல்வியாண்டுகளிலே பார்த்தோமென்றால், ஒப்பளிக்கப்பட்ட இடங்களில் 6,727 இடங்கள் காலியாக இருக்கின்றன. தமிழகத்திலே தொடர்ந்து பொறியியல் கல்லூரிகளினுடைய எண்ணிக்கை கூடுதலாகியும் கடந்த ஆண்டு மாணவர்கள் சேர்க்கைக்காக ஒப்பளிக்கப்பட்டிருந்த 1 இலட்சத்து 92 ஆயிரத்து 719 இடங்களில் 89 ஆயிரத்து 769 மாணவர்கள் மட்டும்தான் பொறியியல் கல்லூரியிலே சேர்ந்திருக்கிறார்கள். இதையெல்லாம் கணக்கில்கொண்டுதான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேவைப்படுகின்ற இடத்திலே, மாணவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் புதிய கல்லூரிகளை வழங்கினார்கள். கடந்த ஆறு ஆண்டுகாலத்திலே உயர் கல்வித் துறையின் சார்பாக கிட்டத்தட்ட 65 கல்லூரிகளைத் தொடங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் இருக்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை கூடுதலாக இருக்கிறது, தொலைதூரம் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து தமிழகத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை கோடிட்டுக் காட்டி, அதன் அடிப்படையிலே கனிவோடு பரிசீலனை செய்யப்படும் என்பதைச் சுட்டிக்காட்டி அமர்கின்றேன்.*

2017 ஜூன் 22]

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள். (குறுக்கீடு) பரவாயில்லை; அடுத்ததாக இன்னொரு கேள்வி கேட்க வாய்ப்புத் தருகிறேன். இப்போது உட்காருங்கள்.

திருமதி வி. கஸ்தூரி வாசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று பாடிய வள்ளலாரைப்போல வாழ்ந்து, எங்கள் வாழ்க்கைக்கெல்லாம் முகவரி தந்த எங்கள் அன்னை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் வழியிலே ஆட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன். என்னுடைய வால்பாறை தொகுதியில், மேல் பகுதியில் ஓர் அரசு கலைக் கல்லூரி உள்ளது. கீழ்ப் பகுதியில் பல உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. பொள்ளாச்சியில் அரசு கல்லூரி இல்லை. ஒரு தனியார் கல்லூரிதான் உள்ளது. எனவே, பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, வால்பாறை ஆகிய தொகுதிகளில் உள்ள மாணவர்கள் கலைக் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால் கோயம்புத்தூருக்குத்தான் செல்ல வேண்டியுள்ளது. எனவே, பொள்ளாச்சியிலோ அல்லது வால்பாறை தொகுதியிலுள்ள ஆனைமலையிலோ ஓர் அரசு கலைக் கல்லூரியை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளுக்கேற்ப, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் கடந்த 6 ஆண்டுகளில் புதிதாக 21 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 24 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளும் தொடங்கப்பட்டு, மாணவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் ஆங்காங்கே அவர்கள் உயர் கல்வி பெறுகின்ற சூழ்நிலையை அரசு உருவாக்கித் தந்திருக்கிறது. அதனடிப்படையில், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அதிக மாணவர்கள் படிக்கின்ற வாய்ப்பை உருவாக்குகின்ற வகையில், கடந்த ஆண்டு சுய

நிதிக் கல்லூரிகளுக்கு 10 சதவீத சேர்க்கையையும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு 20 சதவீத சேர்க்கையையும், அரசு உதவிபெறும் கல்லூரிகளுக்கு 15 சதவீத சேர்க்கையையும் கூடுதலாக ஒதுக்கி, மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் ஆங்காங்கே சேர்க்கை சதவீதங்களை அதிகரித்து, அனைத்து மாணவர்களும் உயர் கல்வி பெறும் நிலையை இந்த அரசு உருவாக்கித் தந்தது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து செயல்படுத்திக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை கண்டிப்பாகப் பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி கேட்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்களுக்கு இன்னொரு கேள்வி கேட்க வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

திரு. பா. நீதிபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் எனது கோரிக்கை குறித்து அரசினுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலனை செய்யப்படும் என்று சொன்னதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். உசிலம்பட்டி அரசு பாலிடெக்னிக் கல்லூரிக்கு புதிய வகுப்பறை கட்டடம் கட்டுவதற்காக ரூ.8 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருப்பதற்காக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய உசிலம்பட்டி தொகுதியில் ஓர் அரசு கலைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றைய தினம், சட்டமன்றப் பேரவையில், உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையிலே உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சியில் குடிநீர் அபிவிருத்திக்காக ரூ.47 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய ஆற்றல் மிக்க தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் உசிலம்பட்டி தொகுதி மக்கள் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்து, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

2017 ஜூன் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.*

திரு. என். சுரேஷ் ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதியில் அண்ணா பல்கலைக்கழகத்தின் சார்பில் ஒரு பொறியியல் கல்லூரி இயங்கிக்கொண்டிருக்கிறது. அந்தப் பொறியியல் கல்லூரி கடந்த 6 ஆண்டு காலமாக உறுப்பு பொறியியல் கல்லூரியாகவே செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற காரணத்தினால், அங்கு பொறியியல் பட்டம் படித்து முடித்துவிட்டு, மேற்படிப்புக்காக வெளிநாடுகளுக்குச் சென்றால், அவர்கள் பெற்ற சான்றிதழ் மறுக்கப்படும் நிலைமை தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தென் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் பயன்பெற வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில், நெல்லை மாவட்டத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தின் பிரிவு இயங்கி வந்தது. ஆனால், இந்த ஆட்சி வந்த பிறகு அது மூடப்பட்டிருக்கிறது. மாணவர்களின் நலன் கருதி அது மீண்டும் இயக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.*

மேலும், 1–8–2012–க்குப் பிறகு அங்கு பணியாற்றக்கூடிய நிரந்தர ஆசிரியர்கள் ஊதிய உயர்வு இல்லாமலும், இணைப்பு ஆணை (Absorption Order) *இல்லாமலும், பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமை மாற்றப்படுமா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி அண்ணா பல்கலைக்கழகத்தின் சார்பாக தமிழகத்தில் இருக்கக்கூடிய ஒட்டுமொத்தக் கல்லூரிகளும் ஒரே தலைமையின்கீழ் ஒன்றாகச் செயல்பட்டது. 2010–ல் பிரிக்கப்பட்டது. 2010–ல் பிரிக்கப்பட்டதற்குப் பிறகு தமிழகம் முழுவதும் இருக்கின்ற மாணவர்களுடைய கல்வித் தகுதி ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடும், அண்ணா பல்கலைக்கழகமானது ஒரு தலைசிறந்த பல்கலைக்கழகம் என்பதைக் கருத்தில்*

கொண்டும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2012–ல் மீண்டும் ஒன்றாக இணைத்தார். அவ்வாறு ஒன்றாக இணைத்த பிறகு இன்றைக்கு இந்திய அளவிலே மட்டுமல்ல, உலக அளவிலே பல்வேறு சிறப்புகளைப் பெற்று விளங்குகின்ற பல்கலைக்கழகமாக அண்ணா பல்கலைக்கழகம் சிறந்து விளங்கிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய அளவில் தேர்வு செய்யப்பட்ட 3 பல்கலைக்கழகங்களில் ஒன்றாக அண்ணா பல்கலைக்கழகம் திகழ்ந்துகொண்டிருக்கிறது. அந்த வகையில், சிறந்த பல்கலைக்கழகமாக இன்றைக்குப் பெயரெடுத்துக்கொண்டிருக்கின்ற அண்ணா பல்கலைக்கழகத்தை ஒன்றாக இணைத்த பெருமை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) உறுப்பினர் சொல்வதுபோல அங்கே இருக்கின்ற உறுப்புக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு சான்றிதழில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. ஒட்டுமொத்தமாக அனைத்துச் சான்றிதழ்களுக்கும் ஒரே மாதிரியான மதிப்பீடுதான் இருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இதனால் மாணவர்களை எந்தவிதத்திலும் பாதிக்காதவண்ணம் பாதுகாக்கின்ற வகையில் அண்ணா பல்கலைக்கழகமானது 584 கல்லூரிகளை ஒன்றாக இணைத்து சிறந்த முறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல அந்த கல்லூரிகளிலே பயிற்றுவிக்கின்ற Guest Lecturers–க்கெல்லாம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இருப்பதைப்போல, முன்பு 6,000 ரூபாயாக இருந்த ஊதியத்தை கூடுதலாக 10,000 ரூபாயாக உயர்த்தித் தந்து, அதன் பிறகு, 10,000 ரூபாயை 15,000 ரூபாயாக உயர்த்தித் தந்த பெருமை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு இன்றைக்கு கூடுதலாக 15,000 ரூபாய் சம்பளம் வழங்குகின்ற நிலையை அம்மா அவர்களின் அரசு உருவாக்கித் தந்திருக்கிறது. Guest Lecturers–ஐ போட்டு, பிரிக்கப்பட்டிருந்ததை ஒன்றாகச் சேர்த்த பிறகு, மீண்டும் தனித் தனியாகப் பிரிக்கின்ற வாய்ப்பு இல்லை. ஆகவே, இன்றைக்கு ஒட்டுமொத்தமாக அனைத்து மாணவர்களும் ஒரே தலைமையின்கீழ் நல்ல கல்வி கற்கின்ற வகையிலும், கல்வி கற்று அவர்கள் உயர்ந்த இடத்திற்குச் செல்லக்கூடிய வகையிலும் அரசானது முனைப்போடு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கின்றேன்.

2017 ஜூன் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடியில் கல்வி வசதி சிறப்பாக இருந்தாலும் கலை, அறிவியல் துறையில் மாணவர்களை போதுமான அளவு சேர்ப்பது இல்லை. அதனால் தனியாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை ஏற்படுத்தித் தர வேண்டும். வேண்டுமென்றால் பெண்களுக்குத் தனியாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டும். என்னிடம் ஒரு நீண்ட பட்டியல் இருக்கிறது. யார், யாருக்கு அங்கே இடம் கிடைக்கவில்லை என்று என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். நான் அமைச்சரிடம் கொடுக்க இருக்கிறேன். ஏறத்தாழ 60 மாணவர்களுக்கு அங்கே கல்வி பயில்வதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. அதற்காக நீங்கள் அவசியமாக புதியதாக ஒரு கல்லூரியை, இருபாலாரும் பயிலக்கூடிய கல்லூரியாக இருந்தாலும் பரவாயில்லை, இல்லையென்றால், பெண்கள் கல்லூரியையாவது நீங்கள் ஏற்படுத்தித் தருவீர்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல பல்வேறு கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கிற காரணத்தினால்தான், நான் முன்பே சுட்டிக்காட்டியதுபோல, அரசுக் கல்லூரிகளிலே 20 சதவிகித மாணவர்கள் சேர்க்கைக்கான உத்தரவை இந்த ஆண்டு அரசு பிறப்பித்துள்ளது. அவர் கூறியதுபோல, 60 மாணவர்களுடைய சேர்க்கைக்கு இடமில்லை என்பதைக் கருத்தில்கொண்டு அந்த மாணவர்களைச் சேர்க்கின்ற வகையிலேயும், பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் மாணவர்களைக் கூடுதலாகச் சேர்க்கின்ற வகையிலேயும், சுயநிதிக் கல்லூரிகளில் 10 சதவிகித இடங்களையும், அரசு உதவி பெறும் கல்லூரிகளில் 15 சதவிகித இடங்களையும் கூடுதலாகச் சேர்த்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையை 20 சதவிகிதம் அதிகரித்து, அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசானது தொடர்ந்து செயல்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அங்கே மாணவர்களின்*

சேர்க்கை ஆண்டுக்காண்டு கூடுதலாக இருக்கிறது என்று உறுப்பினர் சுட்டிக்காட்டினார். ஆகவே, வருங்காலங்களில் அங்கு கூடுதலாக இன்னொரு கல்லூரி தேவைப்படுகின்றபட்சத்திலே, அதையும் ஆய்வு செய்து, அம்மாவினுடைய அரசானது கனிவோடு பரிசீலிக்கும் என்பதைக் கூறி அமர்கின்றேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே.பொ. சிவசுப்பிரமணி அவர்கள்.

திரு. வே.பொ. சிவசுப்பிரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அனுதினமும் வணங்கி மகிழும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மரியாதைக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மொடக்குறிச்சி தொகுதியில் 2011—2012 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே விதி 110—ன்கீழ் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தந்தார்கள். அந்தக் கல்லூரியானது சிவகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இதுவரை சிறப்பாகச் செயல்பட்டு வந்தது. தற்போது அங்கு கிட்டத்தட்ட 3,500 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ரூ.9 கோடி நிதி கொடுத்து, அந்தக் கல்லூரிக்குத் தேவையான புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு, அவை விரைவில் திறக்கப்படவுள்ளன. இதுவரை அந்தக் கல்லூரி செயல்பட்டுவந்த அந்த இடத்தில், கிட்டத்தட்ட 32 வகுப்பறைகள் காலியாக உள்ளன. எனவே, அந்தப் பள்ளியில் ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியினை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அமைத்துத்தர ஆவன செய்ய வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் அன்போடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2017 ஜூன் 22]

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவரது தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டிருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டி, மேலும் ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தேவை என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அங்கே மாணவர்களுடைய அடர்வுக்கேற்ப, மாணவர்களின் சேர்க்கை சதவிகிதத்தினையெல்லாம் கருத்தில் கொண்டு, அவரது தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி எங்கிருக்கிறது, அங்கிருந்து தொலை தூரம் செல்ல வேண்டுமா அல்லது அருகில் இருக்கின்றதா என்பதையெல்லாம் கலந்தாலோசித்து, தேவைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைச் சுட்டிக்காட்டி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

65—

விடுகள் கட்டுதல்

***1556—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

துறைமுகம் தொகுதி, 59-வது வட்டம், பல்லவன் நகரில் வசிப்பவர்களுக்கு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சென்னை துறைமுகம் தொகுதி, 59-வது வட்டத்தில் உள்ள பல்லவன் நகர் குடிசைப் பகுதியில் 753 குடும்பங்கள் வாழ்வதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இக்குடிசைப் பகுதி அமைந்துள்ள இடம் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமானதாகும். சென்னை நதிகள் சீரமைப்புத் துறையால் கூவம் நதியை ரூ.604 கோடியே 77 இலட்சம் செலவில் மேம்படுத்த அரசாணை (நிலை) எண் 9, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைமூலம், 31-1-2015-ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. கூவம் நதி மேம்பாட்டுத்